ஸ்ரீ:

# கான வித்யா ப்ரகாசினி.

(ஓர் இனிய மாதப்பத்திரிகை.)

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. } பிப்ரவரி—1932. { இதழ் 5.

## ஆத்ம சுதந்திரம்.

௧

அறிவினி லூன்றிடும் ஆத்ம சுதந்திரர்
ஆகுலப் படுவாரோ ?
பொறிகளை யடக்கிய பூரணப்புலவர்கள்
பொய்பினை நாடுவாரோ ?

௨

ஆசைப் பிசாசினை யடித்துத் துரத்தியோர்
அகந்தையுள் ளொளிவாரோ ?
பாசத்தைக் களைந்தவர் மனித்தினிற் படுவிடப்
பாம்பினை வளர்ப்பாரோ ?

௩

அற்புதத் தவசக்தி யணவிடுந் தூயவர்
அச்சமொன் றறிவாரோ ?
பொற்கனி நிறைந்தவர் புல்லியர் பால்ஜயம்
புகுதலைப் புரிவாரோ ?

௪

அற்பமிவ் வுலகெலாம் அளித்திடு மகிழ்வென்றே
யறத்துறக் தறிவெய்தோர்,
கற்பகச் சுகத்தினைக் காஞ்சரங் காட்டிற்குக்
கைவிலை செய்வாரோ ?

ரு

ஈகையி னின்பத்தில் இறைவனோ டிருப்பவர்
எமனையும் மதிப்பாரோ?
யோகத்திற் போகத்தை யுகந்திடு முத்தர்கள்
மோகத்திற் குதிப்பாரோ?

சு

மனத்தில் மங்கள சக்தியை யணைந்தவர்
மாயையைத் தவிப்பாரோ?
அனைத்திலும் அவனெனும் அரும்பெருங் காட்சியர்
அழிவினைச் சுவைப்பாரோ?

எ

விளங்குபல் லுயிரெல்லாம் சிற்பர விளக்கமாய்
விண்டதெள் ளருளாளர்
உளங்கொண்ட வொன்றையே பலவெனக்கண்டபின்
உலகினில் மருள்வாரோ?

அ

சுத்த ஸமரஸச் சுதந்திர நித்தியர்
துன்பமொன் றடைவாரோ?
"சத்தியோம்" எனுந்தெய்வ சத்திய சித்தர்கள்
சங்கடப் படுவாரோ! *

—சுத்தானந்தபாரதி.

* 'மார்கழி மாதம் திருவாதிரைநாள்' என்ற மெட்டில் பாடலாம்.

# மனிதற் கடவுள்.

(சுத்தானந்த பாரதி)

திருக்குரானற்ற இஸ்லாமிய வுலகும், பைபிளற்ற கிறிஸ்தவவுலகும், ஜெந்தாவஸ்தா அற்றபாரசீகவுலகும், கண்ணற்றவுடலைப்போலவேயாகும். வழிகாட்டி நடத்துதற்கு ஒருபெரியோர் வாக்குகளையும் உதாரணத்தையும் ஒவ்வொரு நாடும் கொண்டு பணிகின்றது. கேவலம் உண்டுறங்கிக் குட்டிபோட்டு எவ்வழியிலேனும் பொருள்திரட்டிப் போகமனுபவித்து முடிவில், மண்டையைப்போட்டு ஒழிவது மனித வாழ்வல்ல; அது அசல் விலங்கினும் கேடுகெட்ட வாழ்வு. விலங்கிற்கும் மனிதனுக்கும் அறிவின் விரிவிலேயே வேற்றுமையுள்ளது. இவ்வறிவு ஒரு அகண்ட சக்தி. அதன் எல்லையற்ற விரிவில் ஆராய்ந்து செல்லச்செல்ல அதில் ஒரு திவ்யசேதனசக்தி புலனாகும். இந்த சக்தி உணர்வெய்த அறிவைக் கீழ்ப்பல்பின் மடமை, அகந்தை, வீண்வாதம், ஐயம், காமம் வெகுளி மயக்கம் இவற்றினின்று விடுவித்துத் தெளிவாக்கவேண்டும். இப்படித் தெளிவாக்குதல் பல ஸாதனங்களால் இயலும்; சிலர் நூலாதாரத்தையும், பிராணத்தையும் மாசறுத்து உறுதியாக்கி, அதனால் பயன்பெற முயலுவர். சிலர் ராஜயோகத்தால் மனத்தை ஒருமைப்படுத்தி, ஒன்றில் ஊன்றிப்பயன்பெறுவர். இவற்றினும், சாங்கிய யோகத்தால் நான் அறிவான ஆன்மா. பிறவெல்லாம் மாயை என விசாரித்து உண்மை தெளிவர். பிறர் கர்மயோகத்தால் “அனைத்தையும் அறியும் ஒரு முதல்வன் உள்ளான் அவன் மயமே யான்; என் செயல் பயன் அனைத்தும் அவனுக்கே” எனத்தமது வாழ்வையே அவனுக்கு வேள்வியாக்கி, அகந்தையினின்று விடுதலைபெற்று, சுத்தமுற்று உண்மையிர் கூடுவர். பலர் இன்னும்பல தவநெறிகளையும், விரதங்களையும் மேற்கொண்டு தெளிவுறுவர். இவையனைத்தும் அறிவைத் தெளிவுறுத்தி அது எதுவோ அக்கடவுளுண்மையே தானெனத் தெளிவதற்கே யாகும். முயன்று, ஊன்றி ஆய்ந்து தெளிந்த காட்சியாளருக்கு அவ்வறிவுப்பொருள் உறுதியாகக் காணப்படும். அதுவேதான் என்பதும் புலப்படும்; அதுவே அனைத்தும் என்பதும் காணும். சுத்த அறிவே சிவம்; அதுவே உண்மை; அதுவே பலகோடி வேடம் புனைந்து உலகில் நிலவுகிறது, அவ்வோருண்மையே பலகோடி நாமபேதங்களுடன் நிலவுகின்றது. உள்ளதனைத்திலும், உள்ளொளியாகி யொளிரும் ஆன்மா அதுவே. அதையே பிரம்மமென்பது. அறிவின் தெளிவிற்கும், பரிபக்குவத்திற்குந் தக்கபடியே அப்பிரமத்தின் உறவு தெளிவாகிறது. இப்பொருள் உள்ளது, சத்தியம், சத்தியம், சத்தியம். நாம் எப்படிப் பஞ்சபூதங்களையும் உணர்கின்றோமோ அதுபோல் தெளிவடைந்த யோகிகள் இப்பிரம்மத்தைத் தம்முள் இடைவிடாது உணர்ந்து இன்புறுகின்றனர். அதே நினைப்பாளருக்கு அது எய்துவதுறுதி. அப்படி யெய்திய அனுபவமே இதை எழுதுகிறது.

ஆனால் அந்தோ, அறிவனைத்தையும் தூல, வீரிய ஆசை அகந்தைகளில் ஆழ்த்திவிட்டு, அந்த யிருளில் கண்ணிழந்து, தெய்வமில்லை, கடவுளென்பது பொய், ஏமாற்றம் என்று தன்னையே பொய் ஏமாற்றக்குழியில் ஆழ்த்திக்கொள்ளும் நாத்திகம் இக்காலத்தில் சில விடங்களில் விடமுறுத்துகின்றது. அறிவை மென் மேலும் விசாலப்படுத்தித் தன்னுள்ளிருக்கும் மஹாசக்தியான பிரம்மத்தைக் கண்டு, அதன் உணர்விலேயே மனித வாழ்வைத் தெய்வ வாழ்வாக அமைக்கமுடியும். அப்படி நூறுபேர் இருந்தால் அவர்களுடைய சக்தி 100—லட்சம்பேரைத் தெய்வத்தன்மையாக்கும். அந்த அருமையான ஆத்மசக்திச் செல்வத்தைப் பெறுதலின்றி, அவ்வுணர்வையும், அவ்வுணர்வடைந்த பெரியோரையும், அதற்கு வழிகாட்டும் நூல்களையும் தூற்றித்தாமும் வாழாது, பிறரையும் கெடுக்கும் கொடுமை, இருளகந்தையால் தானே அழியும். ருஷ்யா இப்போது பைபிளைப் போட்டுக் கொளுத்துகிறது; எனினும் புத்தமதத்தை ஒப்புகிறது. எதாயினும் ஒன்றைத்தம்மினும் பெரிதாக ஒப்பியே தீரவேண்டும்; அப்பெரும் பொருளுக்கு நமது அகந்தையைச் சரண்படுத்தியே தீரவேண்டும். மனிதனின் கீழியல்பையொடுக்குதற்கு ஒரு உயர்ந்த சக்திக்கு அவன் ஆட்பட்டே தீரவேண்டும்; தன்னினும் பரிசுத்தமான ஒரு பொருளைப்பின்பற்றியேதீரவேண்டும். சிலர் தெய்வத்திற்கே சிறப்புச்செய்யக்கூடாதென்பர்; ஆனால் தமது நாத்திகத்தலைவர்களை யானைமேல் அம்பாரிவைத்து ஏற்றிப்போற்றி மாலைசூட்டி மரியாதைசெய்வர்; அதுவும் ஒருவகை நரவணக்கமே. எப்படியும் மனிதனின் அன்பு தன்னினும் ஒரு பெரிய பொருளைத்தேடிச் செல்லுகின்றது. ஏசுநாதரை அவமதித்தரஷ்யா, லெனினைத் தொழுகிறது. லெனின் சாமியைவணங்கும் ருஷ்ஷியரும் வேறொருவகையில் விக்கிரக ஆராதனையே செய்கின்றனர். லெனின் சாமிக்காக எத்தனையோ உற்சவங்களும் ஆர்ப்பாட்டங்களுஞ் செய்கின்றனர். லெனின் சாமியிடங்கொண்ட மதவெறியால், ஏசுநாதர் திருவாக்குகளை எரிக்கின்றனர், கடவுளன்பர்களைத் துன்புறுத்துகின்றனர். லெனின் சாமியின்மூலம் எந்த மஹாசக்தி ஏழைகளைக் காத்ததோ, எந்த மஹாசக்தியின் ஒரு திவலை லெனின் சாமியோ அந்த மஹாசக்தி ஒவ்வொருவர் உள்ளத்தும், இவ்வுலகெங்கணும் கோயில் கொண்டுள்ளது. அந்த சக்தியே கடவுள் எனப்படுகிறது. புத்தருக்கு விஞ்ஞானமாக நிலவியதும் அந்த சக்தியே. ஏசுநாதர் பரமபிதா என்றதும் அந்த சக்தியே; மெக்கா மசூதியில், தான் கால் நீட்டிய விடமெல்லாம் குருநானகர் காட்டிய பரம்பொருளும் அந்தசக்தியே. அந்த சக்தியைக்கண்டுவிட்டால், பிறகு உலகமுழுதும் ஒரே அன்புமயம்; எவ்வித உயர்வு தாழ்வுமில்லை; வேற்றுமையில்லை. எவ்விதமான வசைபுராணமுமின்றி ‘இதோ உன்னுள் பார், உலகிற் பார். எல்லாம் ஒரு சக்திமயம்’ எனக்காட்டலாம். ஆனால் ஆசை அகந்தை விலங்கிற் கட்டுண்டவன் மஹா சுதந்தர சக்தியை எப்படிக் காணமுடியும் அந்த சக்தியை உருவாலும், நினைப்பாலும் அன்பாலும், பணிவாலும் போற்றி உள்ளுருகியே காண வேண்டும்.

அதைக் காணாவிட்டால் என்னய்யா முழுகிப்போயிற்று? இதோ பாருங்கள். நான் நாள்தோறும் திட்டுகிறேன், தூற்றுகிறேன்; நான் நன்றாகச் சாப்பிட்டு, உறங்கிப் பணம் சம்பாதித்து, குட்டிபோட்டுக் கொண்டிருக்க

வில்லையா? என்று ஒருவன் சொல்லுகின்றான். இத்தகைய வசவில் பரமானந்தப்பட்டு அவனுக்கு ஒரு கூட்டமும் சேருகிறது. எனில் அத்தகையோன் நெஞ்சில் கைவைத்துப் பார்த்தால் ஒரு நிமிஷமேனும் சாந்தமிராது; எப்போது பார்த்தாலும் தாமஸ ராஜஸ குணங்கள் கொதிகொதித்து அவன் மனதை ஊசலாட்டிக்கொண்டே இருக்கும். யார்மேலேனும் அவனுடைய அஹங்காரம் பாய்ந்து கௌவிக் கொண்டேயிருக்கும். ஸத்துவ குணத்திற்கே பூர்ண சாந்தம் எய்தாது. அதையுந்தாண்டி குணாதீதனாவதற்கு சாஸ்திரங்கள் முறையிடுகின்றன! கீழியல்பின் அகந்தையிற் சிக்கியலையும் ஒருவனுக்கு எப்படி சாந்தமிருக்கும்? மனிதன் தன்னுள் சர்வ சாந்தமான அறிவுமயத்தைக்கண்டால்தான், தான் அது, மற்றதெல்லாம் மனமாயை எனவிண்டால்தான், சாந்தம் எய்தும். ஒருவன் அச்சாந்தத்தைப்பெற்றால், அவனைச்சேர்ந்தவருக்கெல்லாம் அது பரவும். ஒரு பழுத்த மஹானின் சந்நிதியில் நமக்கு எத்துணை சாந்தம் பிறக்கிறது; அதுத்தாற்போல், அகந்தையும், ஆசையும், வசவும் குடிகொண்ட ஒருவனுடன் சேர்ந்தால் நல்லவனும் கெடுகிறான். இப்படி அகந்தையும், ஆசையும் நிறைந்து தமது பலத்தால் நல்லோரை நலித்து இடர் செய்பவரே முற்காலம் அரக்கரெனப்பட்டனர்.

நமது தமிழ்நாடு என்றுந் தெய்வமணங்கமழ்வது. கடவுளும், கந்தழியும், கந்தனும், சிவனும், என்றும் தமிழகத்தை நீங்கா துலவுகின்றனர். இத்தெய்வச்சோலையிலும் இன்னொரு புன்புலாற்கழுமுடை நாற்றம் வீசுகிறது. இவ்வுண்மையைக்காணாது உள்விழிமலராத ஊன்விழியர் கடவுளிருப்பைமறுக்கத் துணிகின்றனர்! ஆ பரம்பொருள் எங்குங் கோயில்கொண்டுள்ளான். இதோ உள்ளத்துள்ளான். உலகெங்கும் சின்மயனாகவுள்ளான்.

எங்குமுள்ள தெய்வம்—ஒன்றை
இல்லை யென்பர் மூடர்
பொங்கு சோதிவெள்ளம்—அதனைப்
பொட்டை காணுவானோ!

உள்ளக்கோயிலதனில்—மேலே
யுச்சி மாமலையினில்
உள்ள சக்தி மாண்பை—யறிவின்
ஒளிமிகுந்து காண்போம்!

அகண்ட வுண்மை யறிவாய்—சச்சித்
தானந்தத்தி னிறைவை
யுகந்த சுத்த சித்தர்—பெருமை
யுரையினுக்கு மாமோ?

ஆன்மசக்தி பொங்கும்—கடவுள்
அரசையாளுவோருள்
வானை யாள்வருள்ளும்—அதனை
வையந்தனிற் காண்பர் !

கட்டு மட்டு மில்லை—பின்னோர்
கவலை யெள்ளு மில்லை
எட்டி * எழு நிலையும்—உண்மை
இன்ப மெய்துவாரே !

சாவு நோவு மச்சம்—இல்லை
தாழ்வும் வீழ்வுமில்லை
யாவும் ப்ரம்மமானோர்—அமரர்
அழிவதென்று மாமோ ?

புலவுடம்பும், வெளிப்புலனும், விழியுலகுமே கொண்டு, உயிருடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, மகிழ்வுடம்பு (ப்ராண, மனோ, விக்ஞான ஆனந்த மயகோசம்) இவற்றிற்கும் அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்து நிறையும் பரம் பொருளை, சர்வ சக்தியை மறக்கும் பகற்கூகை விழியர், தெய்வத்தமிழகத்தையா அழுக்குறுத்தவேண்டும் ? ஆ ! தமிழ்மொழி தெய்வத்தேன்மொழி, தமிழ்வேதம் தெய்வமணச் சோலை, தமிழர் ஒருகுலக் கடவுள் மைந்தர், ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்ற ஒற்றுமையுடன் தெய்வ முழக்கம் அதிருந் தமிழ்நாட்டிலா நாத்திகப்பறைமுழக்கம் இன்று கேட்கவேண்டும்! தமிழர்களே, கடவுட்புலவர் அருளிய குறள், திருவாசகம் பெரியபுராணம். வள்ளலார் நூல், தாயுமானார், திருப்புகழ், திருமுறைகள், திருமந்திரம், நாலாயிரப்ரபந்தம் இவையனைத்தையும் ஒருங்கே குப்பையென ஒதுக்கித் தள்ள உங்களுக்குச் சம்மதந்தானா? இவற்றை அருந்தவ விழியால் உண்மை கண்டு யாத்த கடவுட் பெரியார்களைத் தூற்ற உங்களுக்கு நாவெழுமா ? அவர்கள் கண்டு நமது நன்மைக்காக உரைத்த உண்மையை —தெய்வம் உளது, அனைவரும் அதன் மயம் என்னும் உண்மையை—இன்று பொய்யென்று பிதற்ற உங்கள் வாய்துணியுமா ? இப்புனிதப் பெரியோர்கள் வணங்கிய கடவுளை மறுத்து அதை மறுப்போருக்குச் சிறப்புச்செய்து கடவுள் வணக்கம் விட்டு நாத்திக மனித வணக்கஞ்செய்ய உங்கள் மனம் ஒப்புமா ? !

(தொடரும்.)

---

* எழுநிலை: தூலம், ப்ராணம், மனம், விக்ஞானம், ஆனந்தம், ஸத், சித் இவை ஒவ்வொன்றினுமுள்ள பரம்பொருளை யோகானுபவத்தால் கண்டணைதல். அந்நிலை பெற்றோர் மண், கல், புல், உயிர்கள்— அனைத்திலும் தம்முட்கலந்த ஒரே கடவுளைக் காண்பர்.

# ஸ்ரீ த்யாகராஜய்யரவர்களின் சரித்திரம்.

(முன் 111-ம்பக்கத்தின் தொடர்ச்சி.)

திருடர்கள் சிறிதுதூரம் பின்னுற்போய் பிறகு பல்லக்கின் இருபக்
கங்களிலும் நின்ற வீரர்களின் அழகையும், பராக்கிரமத்தையும் பார்த்துக்
கொண்டிருந்தார்கள். எவ்வளவு பாவஞ்செய்தோராகிலும் அவர்களுக்கு
முன் செய்த தவப்பயனுல் பகவானுடைய தரிசனமும், பகவத் பக்தா
ளுடைய தரிசனமுங் கிடைத்த நிமிஷமே அவர்களுக்கு முன்னிருந்த அஞ்
ஞானமாகிற இருள் நீங்கி, ஞானமாகிற பிரகாசம் உதயமாவதுபோல அன்று
இரவு இருள் நீங்கி கீழ்திக்கில் சூர்யன் உதயமானுன். உடனே இராமலக்ஷ்
மணராகிய வீரர்கள் மறைந்துபோயினர். இவையாவும் ஸ்ரீ த்யாகராஜய்
ரவர்களுக்காவது அவர்களுடைய சிஷ்யர்களுக்காவது தெரியாது. பிற
திருடர்கள் பல்லக்கின் ஸமீபத்தில்வந்து ஐயரவர்களை நமஸ்கரித்து 'ஸ்வாமீ
நாங்கள் திருடர்கள். தங்களிடத்திலுள்ள பொருளைத் திருடவந்தோம். ஆனல்
இரவெல்லாம் தங்கள் பல்லக்கின் இருபக்கங்களிலும் நின்றுகொண்டு எங்
கள்பேரில் அம்புகளைப் பொழிந்துகொண்டிருந்த இருவீரரும் எங்கே மறைந்
துபோயினர் ? அம்புகளால் எங்களை மிதமிஞ்சித் துன்பப்படுத்தியபோதி
லும் அவர்கள் மீது எங்களுக்குக் கோபமுண்டாகவில்லை. ஏனெனில் அவர்
களுடைய அழகையும், பராக்கிரமத்தையும் பார்த்து மிகுந்த ஆனந்தமுண்
டாகி சரீரத்தையே மறந்துபோய்விட்டோம். இந்த சிப்பாய்களை எவ்விட
த்திலிருந்து வரவழைத்துக்கொண்டீர்கள்? இப்பொழுது எங்கேயனுப்பி
யிருக்கிறீர்கள்' என்று கேட்டார்கள். அதைக்கேட்ட த்யாகராஜய்யரவர்கள்
இவ்வாறு நடப்பிவித்தது பகவானேயென்று நிச்சயித்து கண்ணிலிருந்து
ஆனந்த பாஷ்பம் பெருக திருடர்களைப்பார்த்து ஓ திருடர்களே ! நீங்கள்
பார்த்த சிப்பாய்களை தயவுசெய்து எனக்குக் காண்பிவிக்கமாட்டீர்களா ?
இதோ என்னிடமுள்ள பொருள், பல்லக்கு முதலான சகலத்தையும் உங்
களுக்கே கொடுத்துவிடுகிறேனென்றார். அதற்குத் திருடர்கள் ஆச்சரிய
மடைந்து ஸ்வாமீ ! தங்களுடைய சேவகர்கள் நின்றது தங்களுக்குத் தெரி
யாதா ? எங்களைக்கொண்டு காண்பிவிக்கச் சொல்லுகிறீர்களே யென்று
கேட்க, ஸ்ரீ த்யாகராஜய்யாவர்கள் திருடர்காள் ! என்னுடைய குலதெய்
வங்களாகிய ஸ்ரீராம லட்சுமணர்களைக் கண்ணாரக்கண்டு தரிசித்த உங்கள்
பாக்கியமே பாக்கியம். முன் ஜன்மங்களில் என்ன தவஞ்செய்தீர்களோ ?
உங்களுக்கு ஸாக்ஷாத் இராம லக்ஷ்மணர்களின் தரிசனங் கிடைத்தது. மஹா
பாவியான எனக்கு அவர்களுடைய தரிசனங் கிடைக்கவில்லையேயென்று

கண்ணீர் பெருக “ராமபாண” “வாசாமகோசர” முதலான கீர்த்தனங்களைப் பாடித்துதித்தார்.

பகவானுடைய தரிசனமும், மஹாபக்தருடைய தரிசனமுங் கிடைத்த நாள்முதலாக அத்திருடர்கள் தங்கள் தீய நடத்தைகளை விட்டு ஸ்ரீராமபத்தர்களாகி ஸ்ரீத்யாகராஜய்யரவர்களை சரணமடைந்து அவருடைய பல்லக்கைச் சுமந்துகொண்டு வனத்தின் வழியாக நெடுந்தூரம் போய்க்கொண்டிருக்கையில் மத்தியில் ஓர் அக்ரஹாரம் காணப்பட்டது அங்கு ஓர் கோவிலின் பக்கத்தில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். த்யாகராஜய்யரவர்கள் சிஷ்யர்களிடம் அதென்ன ஜனக்கூட்டம்? விசாரியுங்களென்றார். சிஷ்யர்களில் ஒருவர் போய் விசாரிக்கும்பொழுது, ஓர் பிராமணன் தனது மனைவி குழந்தையுடன் திருப்பதி யாத்திரைக்கு பிரயாணப்பட்டு வந்ததாகவும், வழிதெரியாமல் காட்டுப்பாதையாக கவலையுடன் வந்துகொண்டிருக்கையில் பொழுது இருட்டி விட்டதாகவும், தற்செயலாக அவர்கள் இவ்வூரைப் பார்த்ததாகவும், இரவில் துஷ்ட மிருகங்களின் தொந்தரவுக்காக ஒவ்வொரு வீட்டிலும் கதவைத்தட்டிக் கூப்பிட்டும் ஒருவராவது கதவைத் திறவாதிருக்க வேறு கதியில்லாததினால் இரவு கோவிலினுள் படுத்திருக்கலாமென்று நினைத்து கோவிலின் கதவைப் பார்க்கும்பொழுது கதவினுட்புறம் தாளிடப்பட்டிருக்க, பிராமணன் மனைவியை நோக்கி பெண்ணே! நானிந்த மதிலின் மேலேறி உள்ளே குதித்து கதவைத்திறக்கிறேன். பிறகு உள்ளே போய் கதவைத் தாளிட்டுக்கொண்டு இராப்பொழுதைப் போக்குவோமென்று சொல்ல, மனைவியும் அவ்வாறே அனுமதி கொடுக்க, பிராமணன் மதில் சுவறிலேறி உள்ளே குதிக்க, அங்கு ஓர் கிணறு இருப்பது தெரியாமல் அதனுள் விழுந்து உயிர்துறக்க, அவனுடைய மனைவி இன்னும் வெகு நேரமாகியும் கதவு திறக்காததால் தன் கணவனுக்கு என்ன விபரீதம் நேர்ந்ததோ தெரியவில்லையே யென்று மறுநாள் உதயம்வரை துக்கத்துடன் புலம்பிக்கொண்டிருக்க, பொழுது விடிந்தவுடன் ஊரிலுள்ள ஜனங்களெல்லோருங்கூடி கோவிலின் கதவைத்திறந்து கிணற்றில் விழுந்து உயிர்துறந்த பிராமணனை வெளியிலெடுத்து ஏதோ சிகிச்சை செய்துகொண்டிருக்க, இறந்தவனின் மனைவி தனது கணவனின் சரீரத்தின்மேலேவிழுந்து அழுது புலம்புவதைப் பார்க்க சகிக்கக்கூடாமலிருக்கிற தென்று விபரமாக சிஷ்யர் குருவினிடம் அறிவித்தார். அதைக்கேட்ட கருணாநிதியாகிய ஸ்ரீத்யாகராஜய்யரவர்கள் மனம் பொறுக்காதவராகி உடனே அந்தப்பிராமணனைப் போய்ப்பார்க்க அவனுடைய கழுத்தி லணிந்திருக்கும் துளசிமாலையைக்கண்டு அவன் ஹரிதாஸனென்று தெரிந்து, இவனுக்குப் பிராணனுண்டாகச் செய்யவேண்டுமென்று “நாஜீவதார” என்ற கீர்த்தனையைப்பாடி பகவானைப் பிரார்த்திக்க உடனே பகவான் அவ்வாறு ப்ராணதானஞ்செய்ய, அந்தப்பிராமணன் எழுந்து முன் நடந்த விருத்தாந்தங்கள் யாவையும் தவறாமல் ஐயரவர்களிடஞ்சொல்லி அவர்களை நமஸ்கரித்து அனுமதி பெற்றுக்கொண்டு திருப்பதிக்குப் புறப்பட்டார். பிறகு ஸ்ரீத்யாகராகஜய்யரவர்களும் பஞ்சநதமென்ற திருவையாறு க்ஷேத்திரத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

சிறிது காலத்திற்குப்பிறகு ஐயரவர்கள் பூலோக வைகுண்டமென்ற ஸ்ரீரெங்க க்ஷேத்திரத்துக்குச்சென்று அங்கு ஸ்ரீ ரெங்கநாயகி ஸமேதராக

எழுந்தருளியிருக்கிற ஸ்ரீரெங்கநாதனைத் தரிசித்து "ஓ ரெங்கசாமி" "கருணஜூடவய்யா" "ராஜுவெடல" முதலான கீர்த்தனங்களைப்பாடி அவ்விடமிருந்து புறப்பட்டு மத்யார்ஜுனமென்ற திருவிடைமருதூர் க்ஷேத்திரத்திற்குச்சென்று ஸ்ரீ மஹாலிங்க ஸ்வாமியை தரிசித்து கோவிந்தபுரத்தில் வஸித்து வந்த ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளை நமஸ்கரித்து மிகப்புகழ்ந்து துதித்து திரும்பவும் பஞ்சநத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்.

கோள தேசத்தில் ஷட்கால கோவிந்ததாஸர் யென்று பெயருடைய ஒருவரிருந்தார், இவர் ஜாதியில் இடையர். இவர் ஸங்கீத வித்தையிலும் பகவத் பக்தியிலுஞ் சிறந்தவர். ஓர் நாள் இரவில் ஸ்ரீராமமூர்த்தி இவருடைய கனவிற் தோன்றி "சோளநாட்டில் திருவையாறு என்ற க்ஷேத்திரத்தில் என்னுடைய பக்தன் த்யாகராஜனென்று ஒருவனிருக்கிறான் அவனை நீ அவசியம் பார்க்கவேணும்" யென்று கட்டளை யிட்டருளின மறு தினமே கோவிந்த தாஸர் அவ்விடம் விட்டு புறப்பட்டு பஞ்சநதமென் திருவையாற்றிற்கு வந்து ஸ்ரீத்யாகராஜய்யரவர்களைக்கண்டு நமஸ்கரித் பகவான் கட்டளையிட்டருளியதை அறிவித்து தன்னுடைய ஸங்கீதத்தை பாடிக்காட்ட ஐயரவர்கள் கேட்டு மிகவும் ஆனந்தித்து "எந்தரோமஹா பாவுலு" கீர்த்தனங்களைப் பாடிப் புகழ்ந்தார். கோவிந்ததாஸர் ஸ்ரீத்யாக ராஜய்யரவர்களின் திருவாக்கிலிருந்து வந்த ஸங்கீதஸாஹித்யங்களைக்கேட்டு ஆச்சரியமடைந்து இவர் ஸாமான்ய மனுஷரல்லர். ஓர் அவதார புருஷன் என்பதாக நினைத்துப் புகழ்ந்து ஐயரவர்களை நமஸ்கரித்து அவரிடம் விடை பெற்றுச் சென்றார். பிறகு காசி க்ஷேத்திரத்திலிருந்து ஓர் பக்தர் இராமேஸ்வர யாத்திரையை உத்தேசித்து வரும்பொழுது "பஞ்சநத க்ஷேத்திரத்திலிருக்கும் என்னுடைய பக்தனான த்யாகராஜய்யரை தரிசித்துப்போ" யென்று ஸ்ரீராமமூர்த்தி அந்த யாத்திரை செய்யும் பக்தரிடம் கனவிற் தெரிவிக்க அவ்வாறே அந்த பக்தர் பஞ்சநத க்ஷேத்திரத்திற்கு வந்து த்யாகராஜய்யரவர்களைக்கண்டு நமஸ்கரித்து பகவான் ஸ்ரீ ராமமூர்த்தி தனக்குக் கட்டளையிட்ட விஷயத்தை ஐயரவர்களிடம் விவரமாக அறிவிக்க, "தாசரதே" என்ற கீர்த்தனையைப்பாடி ஆனந்தித்தார். இவ்வாறாக அனேக் கீர்த்தனங்களைப்பாடிய பிறகு எண்பத்தி எட்டாவது வயதில் "ஞானமொஸகுராதா,, இதிஸமயமுரா க்ருபஜூடகு,, முதலான கீர்த்தனங்களால் தனக்கு மோக்ஷங்கொடுக்கவேண்டு மென்று மனமுருகிப் பாடினார். ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி பிரத்தியக்ஷமாகி "உனக்கு இன்னும் ஒரு ஜன்மம் எடுக்க வேண்டியதாக யிருக்கிறது. அதன்னியில் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷ

மடைய வேண்டுமானல் இப்பொழுதே நீ ஸன்யாஸஞ் செய்துகொள்ள வேண்டும். இன்றைக்கு ஏழாவது தினத்தன்று உனக்கு என்பதவியைக் கொடுக்கிறேனென்று" சொல்லி அந்தர்த்யானமானர்.

உடனே ஸ்ரீ த்யாகராஜய்யரவர்கள் மிகுந்த ஸந்தோஷத்துடன் தன்னுடைய கிரஹத்தில் அனேக ப்ராமணோத்தமர்களும், பாகவதோத்தமர்களும், தன்னுடைய சிஷ்யர்களும் நிறைந்திருக்க வேதவிதிப்படி ஸன்யாஸஞ்செய்துகொண்டு பகவான் கட்டளையிட்டபடி ஏழாவது தினத்தன்று அதாவது கலி நாலாயிரத்தி தொளாயிரத்தி நாற்பத்தெட்டாவது வருஷம் பராபவ நாமஸம்வத்ஸரம் புஷ்யபகுழபஞ்சமி திதியன்று தன்னுடைய கிரஹத்தினுள் ஸ்ரீ ராமமூர்த்தியின் ஸன்னிதானத்தில் சிஷ்யர்களைக்கொண்டு தீபாராதனை செய்யச்சொல்லி பகவன்நாமஞ் சொல்லும்பொழுது ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் சிரஸு பேதித்து அதினின்றும் ஓர் அற்புதமான தேஜஸு கிளம்பி ஆகாயமார்க்கத்திற் செல்ல ஸகல ஜனங்களும் அந்த அற்புதத்தை தரிசித்து ஆச்சரியப்பட்டார்கள். கந்தர்வாளுக்கு ஸமானமான ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் புஷ்பமாரி பொழிந்து கந்தர்வகானம்போல் ஸ்ரீராம பஜனை செய்தார்கள். உடனே ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகளுக்கு ஸன்யாஸ விதிப்படி காவேரி தீரத்தில் ஸமாதிசெய்து மஹாபிஷேகமுஞ் செய்தார்கள். இம் மஹான் வால்மீக ரிஷியின் அம்சமாக அவதாரஞ்செய்ததாகப் பெரியோரால் சொல்லப்படுகிறது. இச்சரித்திரத்தை எதார்த்த பக்தியுடன் படித்தவர்களும், கேட்டவர்களும், அவருடைய ஸமாதியை தரிசித்தவர்களும், ஸ்ரீராமனுடைய க்ருபைக்குப் பாத்திராளாகி ஸங்கீத வித்தையிலும் விசேஷ ஞானமுடையோராகி இகலோகத்தில் வேண்டும் நன்மைகளை யடைவதுடன் மோக்ஷத்தையும் அடைவார்களென்பது முக்காலும் உண்மை.

சுபம்.

## சுகாதாரக்கும்மி.

(ஒரு பெண்மணி பாடியது.)

க. பாவையரே என்றன் பாங்கியரே---கும்மி
பாடி விளையாடும் தோழியரே
ஆவலொடு சுகவாழ்வை யடைவதற்
காகும் வழிகளைத் தேடுவீரே.

உ. உள்ளம் உடலையே பற்றிநிற்கும்—இந்த
உண்மை மறந்திடலாகாதம்மா
தெள்ளத் தெளிந்த அறிவுடையோர் மொழி
தெய்வமொழியென் றுணர்வாயம்மா.

ந. மாசொட றியாமை நேசமாகித்—தம்முள்
வாய்த்தமணஞ்செயும் காரணத்தால்
பேசுமுலகினில் நோய்களனும் பல
பிள்ளைகள் வந்து பிறக்குமம்மா.

ச. சுத்தமே என்றும் சுகமளிக்கும்—தீய
சோம்பலை ஓட்டித்துரத்துமம்மா
இத்தரை வாழ்வைப் பெருக்குமம்மா—அதற்
கிடைதும் இல்லையான் சொன்னேனம்மா.

ரு. ஏதுமழுக்கிலா ஆகாயமே—உடற்
கென்றும் உறுதி பயக்குமம்மா
மோது கடற்கரை சென்றுலவி—உண்மை
முற்றுந் தெளிவுறக் காண்பாயம்மா.

சு. கந்தை யானாலும் கசக்கிப்புடு—எனும்
கற்பனை போற்றி நடப்பாயம்மா
சுந்தரமேனி யுண்டாகுமம்மா—இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ அம்மா.

எ. நித்தமும் ஈசன் திருமுடியில்—கங்கை
நீரைச்சுமந்து திரிவரென்றால்
சுத்தஜலத்தின் குணங்களெல்லாம்—எவர்
சொல்லி முடிக்கவும் வல்லாரம்மா.

௮. மட்டுக்கு மிஞ்சிடில் வானமுதும்—குணம்
மாறி விஷமாகிப் போகுமம்மா
இட்டமுள்ள தோழித்தங்கமே! நீயிதை
என்றும் மறவாதிருப்பாயம்மா.

௯. சுண்டப் பசித்துண்ணும் வேளையிலே—பழஞ்
சோறும் சுவையமுதாகுமம்மா
பண்டி நிறைந்தபின் உண்பவர்க்கு—நல்ல
பாலும் கசப்பாகிப் போகுமம்மா.

௰. வேலைசெய்யாது சோம்பேறிகளாய்—நிதம்
வீட்டிலிருப்பது ஆகாதம்மா
மூலையிலிட்ட இரும்பு துரும்பேறி
மோசமாய்ப் போவதும் கண்டிலீரோ ?

௰௧. நோய்கள் உடலை அணுகிடாமல்—ஆயுள்
நூற்றினும் மேலாய் வளருமம்மா
தீய உணவை அகற்றிடம்மா—வேலை
செய்திட நித்தம் பழகிடம்மா.

௰௨. வேலைகள் செய்துடல் வன்மை பெறின்—இந்த
மேதினி முற்றும் நமதே அம்மா
காலனையும் வென்று வாழ்வோமம்மா—ஒருக்
காலும் தளர்ச்சி யுண்டாகாதம்மா.

௰௩. நித்தமும் நோயாளி ஆகிஐயோ! கட்டில்
நீங்காது நீண்டு கிடப்பவருக்
கெத்தனை செல்வம் இருந்திடினும்—அதில்
யாதும் பயனுண்டோ சொல்வாயம்மா.

௰௪. மன்னுயிர்க்காக உழைத்து நிதம்—சுக
வாழ்வை யளிக்க முயலுவோர் தம்
பொன்னுரை போற்றி ஒழுகுவமேல்—நாமும்
பூரண வாழ்வைப் பெறுவோமம்மா.

௰௫. நாடும் சுகாதாரவாரமென்றும்—இந்த
நானிலத்தோங்கித் தழைக்குகவே
ஆடி விளையாடும் தோழியரும்—நீண்ட
ஆயுளைப்பெற்று வளர்குகவே.

# சந்தோஷத்தின் சரித்திரம்.

(கதைவிநோதன்.)

ஆனந்த நாட்டைச்சேர்ந்த இன்பநிலயம் என்னும் நகரத்தில் சந்தோஷம் என்றொரு பெண்மணி இருந்தாள். அவள் ஒரு சிறுமி. எப்பொழுதும் சந்தோஷமாகவே யிருந்ததால் அவளுக்கு அப்பெயர் கிடைத்தது. ஆனந்த நாட்டிலும் இன்ப நிலயத்திலும் வசித்து வந்த ஜனங்கள் அனைவரும் ஆனந்தமாகவும் இன்பமாகவும் வாழ்ந்தார்கள். அவர்களுக்குள்ளும், சந்தோஷம் ஆனந்தத்திற்குப் பெயர் போனவளா யிருந்தாள்.

சந்தோஷம் இருந்த வீட்டிற்குப்பின் புறத்திலே ஒரு பெரிய மலைத்தொடர் இருந்தது. அதற்கு அப்பாலுள்ள பூமியைக்குறித்து, அந்த நாட்டாரும் நகரத்தாரும் ஒரு விஷயமும் அறியாதவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கு அறிய ஆசையும் இல்லை. சந்தோஷம் என்ற சிறுமி மாத்திரம் அம்மலைத்தொடரை அடிக்கடி கடந்து செல்ல முயர்ச்சித்தது உண்டு.

ஒருநாள் இரவில், சந்தோஷத்தின் வீட்டிற்கு ஓர் அதிதி வந்தான். அவன் முகத்தில் சிறிதளவும் மகிழ்ச்சி காணப்படவில்லை. அவனைக்கண்டு சந்தோஷம் கொஞ்சம் கலக்கம் அடைந்தாள் எனினும் அவள் மறுநிமிஷம் சிரித்துக்கொண்டு, ‘அந்நியனே, நீயார்?’ என்று கேட்டாள். அப்பொழுது அவன் ‘நான் மலைத்தொடருக்கு அப்பாலுள்ள சோகபூமியிலிருந்து வருகிறேன். எங்கள் நகரம் துன்பநிலையம் என்பது. எங்கள் நாட்டில் உன்னைப்போல் ஒருவரும் சிரிப்பதில்லை’ என்று சொன்னான்.

இரவில் விருந்துண்டபின், அம்மனிதன், தான் வழிதப்பி மலைத்தொடரிலுள்ள ஒரு கணவாயின் மூலமாய் அங்கு வந்ததாகக் கூறினான். அந்நாட்டாருக்குப் பொதுவாக ஆனந்தநாடு என்ற ஒரு நாடு இருப்பதாகவே தெரியாது என்றும் அவன் சொன்னான். பிறகு அவன் மறுநாள் அதிகாலையிலே எழுந்திருந்து எங்கேயோ போய்விட்டான். அவ் அந்நியனைச் சந்தித்த நாள்முதல், அம்மலைத்தொடரைத்தாண்டி அப்புதிய நாட்டைப்போய்ப் பார்க்கவேண்டும் என்ற ஆசை சந்தோஷம் என்ற சிறுமிக்கு அதிகரித்தது. அந்த நாட்டாரைச் சந்தித்து, அவர்களுக்குச் சிரிக்கவும் உற்சாகமாயிருக்கவும் கற்பிக்கவேண்டுமென்று சந்தோஷம் கருதினாள்.

சந்தோஷத்தின் விருப்பத்திற்கு அவள் பெற்றோர் முதல் முதல் இணங்கவில்லை. ஆனால் அவள் எப்படியாவது தான் கொண்ட கருத்தை நிறைவேற்றவேண்டும் என்று துணிந்தாள். எனவே அவள் திடீரென்று ஒரு

நாள் ஒருவரிடத்திலும் சொல்லிக்கொள்ளாமலே புறப்பட்டு, மலைப்பக்கமாக நெடுந்தூரம் சென்றபின், ஒரு கணவாயைக்கண்டாள். அதன் வழியாக மலைத்தொடரைக்கடந்து சென்றதும், அவள் சோகபூமியில் அடியெடுத்து வைத்தாள்.

அந்நாட்டில் வீடுகளெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கியிருந்தன எங்கே பார்த்தாலும் அழுக்கு நிறைந்திருந்தது. ஜனங்கள் ஏக்கமுற்றவர்களாயிருந்தனர். அவர்களுடைய முகங்கள் மலர்ச்சி பெறாமல் நீண்டு தொங்கிக் கொண்டிருந்தன. சோகபூமியின் இராஜதானியான துன்பநிலையமோ துன்பத்தால் நிறைந்து ததும்பியது. அந்நகரத்திலுள்ள மாளிகைகளும் அரசனுடைய அரண்மனையும் சிறைச்சாலைகள்போலவே யிருந்தன.

வீடுகளில் பெரும்பாலும் சாளரங்கள் இல்லை. சிலமாளிகைகளிலும் அரண்மனையிலும் அபூர்வமாகக் காணப்பட்ட சிற்சில சாளரங்களும் எப்பொழுதும் அடைக்கப்பெற்றிருந்தன. அந்நகரவாசிகள் சூரிய வெளிச்சத்தையும் காற்றையும் கண்டு பயந்தவர்களைப்போல் கட்டடங்களில் மறைந்து வாழ்ந்தார்கள். நாட்டு மக்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளாமலே நகரவாசிகளுக்காகவும், அரசனுக்காகவும் நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைத்து வந்தார்கள். அக்நாட்டிலே, ஒருவரும் பாடுவதுமில்லை, சிரிப்பதுமில்லை, விளையாடுவதுமில்லை, உற்சாகமாகப் பொழுதுபோக்குவதுமில்லை.

இப்படிப்பட்ட நாட்டிற்குள் வந்த சந்தோஷமும் சிறிது நேரம் தன் சந்தோஷத்தை இழந்தாள். பிறகு அவள் தான் வந்த காரியத்தை ஞாபகப்படுத்திக்கொண்டாள். உடனே ஆடிப்பாடி அகமகிழ்ந்து முகமலர்ந்து, அவள் அந்நகரவீதிகளின் வழியாகச்சென்றாள். அவ்வீதிகளில் அதற்குமுன் ஒருவரும் அவ்விதமாகச் சென்றதே யில்லை. அவ்வீதிகளில் ஆடுவதும் பாடுவதும் சட்டவிரோதமான காரியங்களாகக் கருதப்பெற்றன.

எனவே, நகரவாசிகள் முதலில் சந்தோஷத்தை ஒரு விநோதமான பிராணியாகவே கருதினார்கள் பிறகு சிலர் அவளைப் பித்தம் கொண்டவள் என்று கருதினர். வேறு சிலர் அவளுக்குப் பேய்பிடித்திருக்கிறதென்று கருதினர். இராஜசேவகர் அவளைக்காவற்கூடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கேயிருந்த தலைமை அதிகாரி, அவளை நோக்கி, 'உன்பெயர் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்?' என்று கேட்டான். அவள் தன் பெயர் சந்தோஷம் என்று சொன்னாள். பிறகு தான் ஆனந்த நாட்டின் இராஜதானியான இன்பநிலையத்திலிருந்து வந்ததாகவும், இளஞ்சிரிப்போடு தெரிவித்தாள். அதிகாரி, பெருங்கவலையோடு, 'நீ எங்கள் சட்டத்தின்படி ஒரு குற்றவாளி. உன் வழக்கை மஹாராஜாவே நேரில் விசாரிப்பார்' என்றான்.

சோகபூமியின் அரசனான சோகவர்மன் துன்பநிலையத்திலுள்ள தன் அரண்மனையில், வெளிச்சமும் காற்றோட்டமுமில்லாத ஆஸ்தான மண்டபத்திலே கொலுவீற்றிருந்தான். மண்டபமும் சிங்காதனமும் கன்னங்கரிய

னவாய் அமைந்திருந்தன. அரசனும் கரியகாற் சட்டைகளும் மேற்சட்டைகளும் தரித்திருந்தான். அரசனுடைய முகமும், கோபத்தாலும் கவலையாலும் கறுத்து இருள் அடைந்திருந்தது.

அரசன்முன், அதிகாரிகள் ஸந்தோஷத்தைக்குற்றவாளியாகக் கொண்டு நிறுத்தினார்கள். தான் ஆனந்தநாட்டிலிருந்து வருவதாக அவள் சொன்னபோது, அரசன் ஆச்சரியப்பட்டான். அவள் தன்னூர் இன்ப நிலயமென்றும் தன் பெயர் ஸந்தோஷமென்றும் தெரிவித்தபோது, அரசனுடைய ஆச்சரியம் அதிகரித்தது. அரசன் ஸந்தோஷத்தின் முகத்தை உற்று நோக்கினான். 'என்ன களை! என்ன அழகு!' என்று அதிசயித்தான். பிறகு அவன் ஸந்தோஷத்தை நோக்கி, 'பெண்ணே, துன்பம் நிறைந்த இவ்வுலகத்தில் நீ ஏன் சிரிக்கிறாய்? நகரவீதியில் நீ ஆடுகிறாயாம், பாடுகிறாயாம் ஐயோ! இக்குற்றங்களுக்காக நீ தண்டனை அடைய வேண்டும். அல்லவா? 'என்று கேட்டான்.'

அப்பொழுது சந்தோஷம், மனத்திலுள்ள மகிழ்ச்சியே தன் ஆடல் பாடல்களுக்குக் காரணம் என்று சொன்னாள். அவ்வளவு மகிழ்ச்சிக்குக் காரணம் இல்லையே! அரசனாகிய நான் எவ்வளவு துக்கத்தோடு இருக்கிறேன், பார்' என்று அரசன் கூறினான்.

உடனே சந்தோஷம் இளநகை யரும்பி, இனிய குரலில், அரசே, தங்கள் துக்கத்திற்குக் காரணம் என்ன?' என்று கேட்டாள். அரசன் அவளோடு சம்பாஷிக்கவிரும்பினான். எனவே, அவன் அவள் கேட்ட கேள்விக்குப் பின்வருமாறு விடையளித்தான். "துக்கத்திற்குக் காரணமும் வேண்டுமோ? இவ்வாழ்க்கை துக்கமயமல்லவா? நேற்று வேட்டையாட விரும்பினேன்; மழைபெய்தது. இன்று அரண்மனைக்குள்ளேயே இருந்து விடலாம் என்று தீர்மானித்துவிட்டேன். ஆனால் மழையில்லை. வெளியே சென்று வேட்டையாடத்தக்க வசதி இன்று ஏற்பட்டிருக்கிறது இப்படியே, நாம் நினையாதது நடக்கிறது; நினைப்பது நடப்பதில்லை. இவ்வளவு துக்கமயமான உலகத்திலே சந்தோஷமாயிருப்பது தகுமா? ஆடுவதும் பாடுவதும் பெருங்குற்றம் அல்லவா?"

சந்தோஷம் அன்போடும் இரக்கத்தோடும் அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். பிறகு அவள் அரசனை நோக்கி, "மஹாராஜாவே மனக்கவலையை விட்டுவிடுங்கள். உலகம் இன்பமயமானது; துன்பமயமானதல்ல" என்று மலர்ந்த முகத்தோடு கூறினாள். அரசன் 'நீ சொல்வது உண்மை தானா?' என்று பெருமூச்சு விட்டான்.

ஸந்தோஷத்தின் முகம் இப்பொழுது அதிக மலர்ச்சிபெற்றது. "மழையும் இன்பம்; சூரிய வெளிச்சமும் இன்பம்; சந்திரிகையும் இன்பம்; காற்றும் இன்பம். நேற்று மழையில் பயிர் பச்சைகளும் மிருகங்களும் பறவைகளும் இன்பமுற்றன. இன்று அவை சூரியவெளிச்சம் கண்டு இன்பம் அடைகின்றன. அப்படியே மனிதர்களான நாமும் இவ்வுலகிலே இன்பம்

அனுபவிக்கவேண்டும். நல்லவர்களுக்கு எங்கும் இன்பம்; எல்லாம் என்று சந்தோஷம் உற்சாகமாகப்பேசினள். அரசனுக்கு அப்பேச்சு அமுதமாயிருந்தது. அவன் ஆசையோடு அதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அரசன் மனத்திலும் இப்பொழுது மகிழ்ச்சி பொங்கியது. அவன் சந்தோஷத்தை நோக்கி இளநகை அரும்பினன். ஆஸ்தான மண்டபத்தில் இருந்தவர்களெல்லாம் தங்களை அறியாமலே சந்தோஷித்தார்கள். பிறகு அவர்கள் அனைவரும் அரண்மனையைவிட்டு வெளியே வந்தார்கள். சந்தோஷம் ஆடினள், பாடினள். ஆனந்தம் கொண்டாள். மற்றவர்களும் சந்தோஷத்தைப்பின்பற்றி ஆடினர், பாடினர், ஆனந்தம் கொண்டாடினர்.

ஆடல் பாடல்களுக்கு விரோதமாயிருந்த பழைய சட்டம் ஒழிந்தது. ஒவ்வொரு நாளும் ஜனங்கள் உழைப்பதோடு மகிழ்ச்சிக்கு உரிய விளையாட்டிலும் கருத்தைச் செலுத்தவேண்டும் என்று ஓர் புதிய சட்டம் பிறந்தது. உழைப்பிலும் உற்சாகம் வேண்டும், மகிழ்ச்சிவேண்டும்—என்ற பாடத்தையும் சந்தோஷம் அந்நாட்டாருக்குக் கற்பித்தாள். இடையிடையே, விடுமுறைவேண்டும், விழாவேண்டும்—என்பதையும் நாளடைவில் அந்நாட்டார் கற்றுக்கொண்டனர்.

ஆரம்பத்தில் அந்நாட்டிலுள்ளவர் பலர்க்கும் சிரிக்கப்பழகுவதே சிரமமான காரியமாயிருந்தது. எனினும் விரைவில் ஒரு தொத்துநோய்போல் மகிழ்ச்சி நாட்டிலே பரவத்தொடங்கியது. ஜனங்கள் அழுக்கடைந்த வீடுகளை இடித்துத் தள்ளிவிட்டு, அழகான—காற்றேட்டமுள்ள வீடுகள் கட்டினர்கள். இடையிடையே பூந்தோட்டங்களையும் அமைத்துக்கொண்டார்கள். அரசனுக்கும் ஓர் புதிய வசதியான அரண்மனை கட்டினர்கள். நாட்டின் பெயரான சோகபூமி யென்பதை அவர்கள் சந்தோஷபூமி யென்று மாற்றிவிட்டார்கள். சந்தோஷம் என்னும் சிறுமியைக் கௌரவிப்பதற்காகவே, அவர்கள் அவ்வாறு தங்கள் நாட்டிற்குப் புதிய பெயர் இட்டார்கள்.

துன்பநிலையம் என்ற இராஜதானியும் அன்புநிலையம் என்ற பெயர் பெறுவதாயிற்று. சோகவர்மன் என்ற அரசன் உற்சாகவர்மனுனன். சந்தோஷம் என்னும் சிறுமி விஜயம் செய்ததினத்தை அந்நாட்டு மக்கள் ஒரு திருவிழாவாகக்கொண்டாடினர்கள். முதல் வருஷ விழா முற்றுப்பெற்றதும் ஜனங்கள் அரண்மனை வாசலில் பெருங்கூட்டமாகக் கூடிநின்று,

'உற்சாகவர்மன் நீடுவாழ்க!'

என்று வாழ்த்தினர்கள். அரசனே, மேல்மாடத்திலிருந்துகொண்டு,

'சந்தோஷம் நீடுவாழ்க'

என்று உரக்கக் கூவினன்—சுபம்.

உ

# மாய உலகத்து அதிசயங்கள்.

(K. விஜயராகவ அய்யங்கார்.)

நீங்கள் மாயா உலகம் போய் வந்ததுண்டா? இல்லையானால் அங்கு சென்று திரும்பி வந்து உங்கள் பொருட்டு எழுதப்படும் இக்கட்டுரையைப் படியுங்கள். மாயா உலகம் சென்று வந்தவர்கள் இக்கட்டுரையைப் படிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் அவர்கள் நேரில் கண்டது தான்.

பூலோகத்தின்கண் அமைந்த கூரை வீடுகளையும் சிறிய மாளிகைகளையும் பாாத்த என் கண்கள் மாயா உலகத்தின் நகரம் ஒன்றில் அமைந்த மாட மாளிகைகளையும், பிரும்மாண்டமான கட்டிடங்களையும் கண்டு பிரமித்தது. திசைப்பூண்டு மிதித்தவன் அருண்டு திசை தெரியாது விழிப்பது போல் அந்நகரத்தின் சாலை ஒன்றில் நான் பிரமித்து நின்று கொண்டிருந்தேன். அது சமயம் மோட்டாரில் சவாரி செய்து வந்த ஸ்திரீ ஒருவள் "யார் அங்கு நிற்பது?" என்று கேட்கவும் திரும்பிப் பார்த்தேன். மாயா உலகத்து மனிதர் பேசுவது ஆங்கிலம் என்பதை நான் தெரிந்துகொண்டவனாதலின் எனக்கு அங்குள்ளவர்களுடன் பேச சிரமமில்லாதிருந்தது.

நமது நகரங்களில் திசை தெரியாது விழிக்கும் காலத்து முறுக்கான ஆண்பிள்ளையே நம்மைக்கவனிக்காது செல்வதை நாம் பன்முறை நமது அனுபவத்தில் கண்டிருக்க "யார் அங்கு நிற்பது" என்று கேட்டது ஒரு பெண்பிள்ளையாயிருக்கக்கண்டு நான் அடைந்த ஆச்சரியம் கூறமுடியாது. அங்கம் தெரியும் ஆடை. தலை கிராப்பு, காலில் பூட்சு, நாணம் என்றால் என்ன? என்று கேட்கும் முறையில் பார்வை, பயமில்லாத பேச்சு முதலிய நற்குணங்கள் அமைந்த நாரீ மணிகள் மாயா உலகத்தில் வசிக்கின்றார்கள் என்பதை நான் அப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். "மாயா உலகத்தைப் பார்க்கவேண்டுமென நெடுநாளைய ஆவல்; ஆகவே இங்கு வந்தேன். வந்தது முதல் என் மனம் குழம்பிப்போயுள்ளது. எங்கள் உலகத்திற்கு முற்றும் மாறுபாடான நடை, உடை, பாவனை, நாகரீகம் முதலிய யாவும் அமைந்துள்ளது. இத்தகைய புதுமைகள் எங்கள் நாட்டில் இல்லை. இவ்வுலக வாழ்வு எங்கள் நாட்டார்க்குப் பிடிக்காது." என்றேன்.

"ஆம்! உண்மைதான். உங்கள் உலகத்தார் பாவம்! அறிவிலி கள், மனிதர்களும் உழைப்புக் குணமற்ற சோம்பேறிகள். மூட நம்பிக்கையும், பேடித்தனமும் கொண்டவர்கள். சமத்வ புத்தி இல்லாதவர்கள். அவர் களுக்கு இவ்வுலகம் வெறுப்பாகவே தோன்றும். எங்கள் உலகை ஆதியில் படைத்தவன் மயன்; அந்த வம்சத்தில் பிறந்தவர்களே நாங்கள்." என் ருள் அப்பெண்மணி.

"ஐயோ! மயன் அசுரனுச்சுதே?" என்று வியப்புடன் வினவி னேன்.

"அவன் அசுரனே, தேவனே தெரியாது. ஆனல் நீங்கள் தேவர்கள் போலும்" என்ருள் அப்பெண்.

"ஆம்! நாங்கள் தேவதைகளின் வம்சத்தில் உதித்தவர்கள். மனே அமைதியும், இன்பவாழ்வும், ஈசுவரசிந்தனையுமே எங்கள் வாழ்வின் நோக்கம். அத்தகைய எண்ணங்கொண்ட எங்கள் மனிதர்களுக்கு இவ்வுல கம் பிடிக்காதது வியப்பல்லவே" என்றேன்.

"எங்கள் உலகில் பணமே தெய்வம்; ஆண் பெண் அனைவரும் உண்டு, குடித்துக்களித்து, ஆடிப்பாடிக்குதித்துப் பணத்தைத்தேடி விர யம் செய்வதே எங்கள் ஜீவிய இன்பம். அதுவே எங்கள் வாழ்வின் நோக் கம்." என்ருள் அப்பெண்.

"சந்தோஷம். வந்தது வந்துவிட்டேன். உங்கள் உலகத்து விசித் திரங்களையும், அற்புதங்களையும், காட்டக்கூடுமோ" என்றேன். அந்நங் கையும் என்னைத்தன் மோட்டாரில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டுக்கு அழைத் துச்சென்ருள். அப்பெண்மணியின் விருந்தினனுக நான் இருந்தேன்.

யாதொரு கூச்சமுமின்றி அந்நாட்டுப்பெண்டிர் மற்றவர்களுடன் கூடிக் குலாவுவதையும், எனது சகாப்பெண்மணி என்மீது உராய்ந்து கொண்டு மோட்டாரில் பிரயாணம் செய்ததும் பெரும் வியப்பைத்தந்தது. ஆகா யத்தை அளாவிய மாளிகைகளையும், உப்பரிகைகளையும் நிமிர்ந்து பார்த்து என் கழுத்துச் சுளுக்கிக்கொண்டது. மாயா உலகத்தில் நான்கு மாடிகளுக்கு குறைந்த வீடே இல்லை. பெரிய வீடுகள் சில 40, 50 மாடிகளுடன் அமைந்திருந்தன. தெருக்களில் எறும்புகள் சாரிசாரியாகப் போவதுபோல் மோட்டார்கள் ஓடிக்கொண்டிருந்தன. நடந்து செல்பவர் ஒரு சிலர்தான். மாயா உலகத்தில் கடைத்தெரு வியாபாரத்திற்கென்றே பிறந்திருக்கின் றோம் என்று கூறின. ஒவ்வொரு கடையிலும் தங்கநாணயம் தண்ணீர்போல் புரண்டுகொண்டிருந்தது. தேனடைகளை ஈக்கள் மொய்ப்பதுபோல் கடை களின் முன்னர் கூட்டம் நின்றுகொண்டிருந்தது. மாயா உலகம் மதிக்கப் படுவது இந்த வியாபாரத்தினுல் தான் என்றும், இம்மண்டலத்திலேயே தங்களுடன் சமானமாக நிற்கும் நாடு இல்லை என்றும் என்னுடன் வந்த சகாப்பெண்மணி மார்புதட்டினுள். "வியாபாரத்தில் அதிகப்பணம்

திரட்டுவதெனில் மோசம் செய்யாது முடியாதே ?" எனக் கூறினேன். மோசமென்றும், நாசமென்றும், வேஷமென்றும் எங்கள் உலகத்தில் கவனிப்பது கிடையாது. எங்கள் நாட்டில் பொருள் திரட்டுவதே நோக்கம். பணம் பாதாளம்வரை பாயுமல்லவா" எனக்கூறிச் சிறித்தாள் அப்பெண், மாயா உலகத்தில் கோர்ட்டுகளுக்குக் குறைவில்லை. உத்தியானவனங்கள், சினிமா காக்ஷிசாலைகள், பந்தாடு மிடங்கள், குடிக்குமிடங்கள், வியபசார விடுதிகள், கலாசாலைகள், பள்ளிக்கூடங்கள், ஸ்தூபிகளுடன் விளங்கும் கோயில்கள், யாவற்றையும் என்னுடன் வந்த மங்கை காட்டினாள். அந்நகரமே அவ்வுலகின் தலைமைஸ்தானமாதலின் மற்ற இடங்களைப் போய் பார்க்க வேண்டாம் எனத்தோன்றியது. நம் நாட்டில் காணப்படும் இயற்கை அழகை அங்கு காணமுடியவில்லை. செய்கையால் சிறந்த உருவமாக மாயா நகரம் திகழ்ந்தது. என்னுடன் வந்த நங்கை தன்னுடன் போஜன மருந்த வேண்டிக்கொண்டதை மறுக்க மனமின்றி அங்குபோஜனமருந்தினேன். நம் உலகத்தாரின் ருசிக்கு மாறுபாடான ஆகாரமே அவர்கள் புசிப்பது. அத்தகைய ஆகாரமே எனக்குக் கொடுக்கப்பட்டது. தண்ணீருக்குப்பதில் பலவித பானங்கள் எனக்குத் தரப்பட்டன. அன்றிரவு நான் நன்றாகத் தூங்கினேன்.

மறுநாள் பொழுதுபோக்குக்கு ஒரு புத்தகசாலையை அடைந்தேன். அங்கிருந்தோர் என்னைப் பார்வையில்ருந்து அவர்கள் என்னை ஒரு காட்டுமிராண்டி எனக்கருதினதாகத் தோன்றியது. என்னைப்பார்த்து சிலர் முகத்தைத் திருப்பிக்கொண்டனர். முகத்தைச் சுளித்தனர் ஒரு சிலர். ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக்கொண்டார்கள். அங்கு ஆண்களும், பெண்களும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து பேசி விளையாடியது எனக்குச் சகிக்க முடியாத துயரமாயிருந்தது.

நான் சென்ற வாசகசாலையில் லக்ஷக்கணக்கில் புஸ்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தது. எனக்குப்பிடித்த ஒரு புஸ்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். "மாயா உலகத்து அதிசயங்கள்" என்பது அதன் பெயர். அதை யெழுதியவர் ஒரு தேவலோகவாசியாதலால் அதைப்படிக்க எனக்கு இன்பம் கொடுத்தது.

அப்புத்தகத்தின் ரஸமான பாகம் பின்வருமாறு:—

நாகரீகத்தில் தலை நிமிர்ந்து நிற்பது மாயா உலகமே. நாகரீகம் என்பதற்கு "பணம்" என்பதே பொருள். நம் உலகத்தில் "குணம்" பிரதானமாகக் கருதப்படுகிறது. "பணம்" தெய்வமெனக் கருதப்படும் மாய உலகத்தார் வஞ்சகம், சூழ்ச்சி, பொய், கொடுமை, சுயநலம், இயற்கை நியமத்தை மீறுதல் முதலியவைகளைப் பாவமெனக் கருதுவதில்லை. பணம் என்பது பெரிதாகக் கருதப்படும் காலத்து மேற்கண்ட காரியங்கள் நடைபெறுவது வழக்கமல்லவோ ?

மாயா உலகத்தில் பணத்தினால் ஆகாதகாரியமில்லை. தங்கநாணயம் படைத்தால் எதுவும் சாதிக்கலாம். பணம் படைத்தவனுக்கே மதிப்பு. பணக்காரனால் அவ்வுலகத்துச் சட்டங்கள் தலைகீழாய் புரளுகின்றன. ஆகவே பணக்காரன் ஆவதே வாழ்வின் லக்ஷ்யமாக அங்கு கருதப்படுகின்றது. எத்தகைய துர்க்காரியங்களுக்கும் அஞ்சாது பொருள் சேர்ப்பதில் அவ்வுலகத்து ஆண் பெண் அனைவரும் ஈடுபட்டு நிற்கின்றனர். இத்தகைய துர் காரியங்களுக்குவேண்டிய வழிகளையும், வெற்றிபெறும் ரகசியங்களையும் அவ்வுலகத்து "சினிமா" படங்கள் பெரிதும் போதிக்கின்றன. பணப்பேயின் காரணமாக, சகோதரர்கள் ஒருவருக்கொருவர் விஷம் வைப்பதும், தந்தை மக்களுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்வதும், சகோதரிகள் விற்று விடப்படுவதும், கள்ள நாணயங்கள் செய்யும் வழிகளும் பற்றிய கதைகள் அநேகம் கூறப்பட்டிருக்கின்றன. காரிகையர் தம் குழந்தைகளை யாராவது வளர்க்கட்டும் என்று தெருவில் விட்ட சங்கதிகள் பெரிய புராணம்போல் எழுதப்பட்டிருந்தது. இத்தகைய செய்கைகளுக்குத் தண்டனை விதிக்கும் கடவுளுக்கும் பணத்தைக்கொடுத்து ஏமாற்றி விடலாமென்று மாயா உலகத்தினரின் எண்ணமோ என்னவோ?

மாயா உலகத்தில் பிரபுக்கள் வைத்ததே சட்டம். கோர்ட்டுகளில் கூட அவர்களுக்குத் தனியாக நீதி. சட்டசபைகள் பொதுஜன ஆக்ஷியாளுலும் அங்கு ஸ்தானம் வகிப்பவர்களும் பிரபுக்கள்தான். சமத்வம் அதிகமாகப்பேசப்பட்டாலும் அவ்வுலகில் ஒரு கூட்டத்தினருக்கு ஓட்டுரிமை கிடையாது. அவர்கள் காட்டுமிராண்டிகள் என ஒதுக்கப்பட்டு மிக்க கேவலமாக நடத்தப்படுகின்றனர். அவர்கள் அந்நாட்டு மக்களிடம் படும் துன்பம் கூறமுடியாது. தேகத்தின் சதை கிழிந்து போகும்படி சில சமயம் இவர்கள் அடிக்கப்படுகின்றனர். காட்டுமிராண்டிகள் நாயினும் கீழாக மதிக்கப்படுகின்றார்கள் என்று திண்ணமாய்க் கூறலாம் அவ்வுலகத்து உயர்ந்த ஸ்திரீகளுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டுவிடுவதாய் பெரிதும் துன்பப்படுத்தப்படுகின்றனர். ஆனால் உண்மை அவ்வாறில்லை. சில சமயம் கௌரவ குடும்பத்தில் உதித்தவர்களே—முக்கியமாய் ஸ்திரீகள் காட்டுமிராண்டிகளுடன் சோரத்தனம் செய்துவிடுவதாய் நீதிபதிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றவாளி ஒருவனிருக்க அநீதியாகதண்டிக்கப்பட்ட காட்டுமிராண்டிகள்தொகை கணக்கிலடங்காது. அவ்வுலகத்தில் காட்டுமிராண்டிகள் சவுக்கடி படுவதை மற்றவர்கள் கண்டு மகிழ்வராம். இத்தகைய உலகத்து மாது பூலோகத்தார் சமத்வ சிந்தனை இல்லாதவர்கள் என்று கூறியது எனக்கு பெரும் வியப்பைத் தந்தது.

ஒரு கொலைக்கேசில் ஒரு காட்டுமிராண்டியைக் குற்றவாளி என்று கூறவேண்டும் என்பதற்காக ஒரு ஜூரிசாட்டையடி யடிக்கப்பட்டு வாக்குறுதி வாங்கப்பட்டார். இன்னம் இதுபோன்ற பலகதைகள் அப்புத்தகத்தில் தென்பட்டது.

மாய உலகத்து ஆண்களையும், பெண்களையும் உடையால்தான் வித்தியாசம் கண்டுகொள்ள முடியும். பெண்களிடம் அடக்கமோ, கற்போ அந்

நாட்டில் நீங்கள் காணமுடியாது. அறிவும், இரக்கமும், தூய்மையும் பூலோகத்தில் இருப்பதுபோல் அங்கில்லை. நிமிர்ந்த பார்வை, சிகரட்புகை பரிகாசப்பேச்சு, காமப்பார்வை இவைகளுடனேயே மாய உலகத்துப்பெண் தெய்வங்கள் காக்ஷிதருவர். மாய உலகத்துப் பல்லாயிரக்கணக்கான பத்திரிகைகளைப் பிரித்துப் பார்த்தால் பெண்தெய்வங்கள் மேலேகண்ட தோற்றத்துடன் வருணிக்கப்பட்டு படத்துடன் விளங்குவர். ஆடவன் அணங்கை முத்தமிடுவதும், மடிமீதிருத்திக்கொஞ்சுவதும், இன்னம் பல ரசாபாசங்களும் அடங்கிய படம் பிரசுரிக்கப்படாத பத்திரிகையே இல்லை எனக்கூறலாம். ஆகவே ஒழுக்கக்குறைவுள்ள அவ்வுலகத்து மக்கள் மதோன்மத்தராய்த் திரிகின்றார்கள், என்பது நன்றாய் எனக்குத்தெரிந்தது.

மாயா உலகத்தில் குழந்தைகள் சீட்டு விளையாடுகின்றன. சிறுவர் சிறுமிகள் சீட்டு விளையாடித்தோற்றவர்கள் தங்கள் ஆடையைக் கழற்றி வைத்துவிடுவது கூத்திலும் பெரும் கூத்தாகும். மாயா உலகத்தாருக்குப் பெண் இன்பமே பெரும் இன்பம். அல்பப்பொருளுக்கும் ஆசைப்பட்டுமயங்கி பயங்கர வாழ்க்கை நடத்துபவர் மாயா உலகத்தில் உளர். இத்தகைய நிகழ்ச்சிகளால் மாயா உலகத்தில் 100-க்கு 95-பேருக்கு காமப்பயிற்சியும், அதற்குரிய வழிகளும் தெரிந்திருக்கிறது. இத்தகைய காரியங்கள் நிகழும் அவ்வுலகில் பெரும்பான்மையோர் ஸ்திரீ சம்பந்த வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள் என்பதும் தெரிகிறது.

மாய உலகத்து விவாகம் அதிவிசித்திரம். விவாகம் செய்துகொண்டு தங்கள் கணவருடன் நீண்டகாலம் வாழ்ந்தவர்கள் தொகை கொஞ்சம். விவாகம் நடந்த கொஞ்சகாலத்திற்குள்ளாக விவாக ரத்து. சில சமயம் குழந்தை பெற்றவர்களும் விவாக ரத்து செய்துகொள்கின்றனர். கணவனைக் கண்டுபிடிக்காத மறுவினாடியே மனைவி விவாகரத்துசெய்துகொள்ளலாம். அதற்கென கச்சேரிகள் இருக்கின்றன. அவ்வுலகத்தின் கோர்ட்டுகளில் பெரும்பான்மையான வழக்குகள் இந்த இனத்தில் சேர்ந்தவை. அதற்குரிய சாக்ஷிகள், வக்கீல்கள், ஆர்ப்பாட்டங்கள், தீர்ப்பு யாவும் நடைபெறுகின்றன. விவாகரத்தான பின்பு அவள் வேறு விவாகம் செய்துகொள்ளலாம். இவ்விதநிலையில் சுமார் ஆறு, ஏழு, கணவன்களை விவாகம்செய்து கொண்டவர்களும் உளர். மாயா உலகில் விவாகம் செய்துகொள்வதாய் உறுதிகூறிய மனிதனை நம்பி கற்பிழந்து தவிக்கும் காரிகையர் கூட்டத்திற்கும் குறைவில்லை.

பூவுலகத்தில் காதல் தெய்வீகம் பொருந்தியதாகக் கருதப்படுகிறது. இயற்கையாகத் தோன்றுவது காதல். உள்ளத்தில்த்தோன்றி உள்ளத்தை மகிழ்விப்பது காதல். ஆனால் மாயா உலகினர் காமத்தையே காதலாகக் கருதுகின்றனர். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஹிருதய பூர்வமாக உள்ளன்புடன் நேசித்து பின் அக்கணவனுக்கே வாழ்க்கைப்பட்டு, அவனுக்காக வாழ்வதே உயர்ந்த காதலாகக் கருதப்பட்டுவந்திருக்கிறது. ஆனால் மாயா உலகில் அதற்கு மாறான செய்கைகளே மிகுதி. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சிறு வயதிலேயே காமவுணர்ச்சி தோன்றிக்கொள்கிறது. இளம் வயதிலேயே

கெட்ட வழியில் இறங்கிய குழந்தைகள் கதை மகாவியப்பாகும். 7-வயதுள்ள பெண், தன் சகோதரனுடனும், நண்பர்களுடனும் சோரநட்புக்கொண்ட விநோதத்தை பூலோக வாசிகள் நம்பமாட்டார்கள். வேறு ஒரு இளம்பெண் தனக்குப் பலகாதலர்கள் உண்டு என்று பெருமைபாராட்டியதை நினைக்க எனக்குத் தாங்கொணு வியப்பு உண்டாயிற்று. இத்தகைய காரியங்கள் எக்காரணம்கொண்டு நடைபெறுகின்றன, என்று ஆராய்ந்து பார்த்த மட்டில், அந்நாட்டு மக்கள் தங்கள் விவாகம் ஒருமுறை என்பதையும், தங்களுக்குறிய கணவன் ஒருவனே என்பதையும் எண்ணாது பலமணம் கொள்ளும் வழக்கமேயாகும். இத்தகைய வழக்கம்கொண்ட பெற்றோரின் குணம் மக்களுக்குப்படிவது இயற்கைதானே. மேலும் ஆடவரும் பெண்டிரும் இயற்கைக்கு மாறான வண்ணம் ஒன்றுசேர்ந்து பால்ய பருவத்தில் ஒரே பள்ளியில் படித்து உறவாடுவதும் முக்கியகாரணமாகும் என்பதாக ஒருவர் அபிப்ராயப்படுகிறார். "கலாசாலையில் படிக்கும் காலத்திலிருந்து இன்பப்பேச்சு பேசி அன்பு பாராட்டி, ஆசை வார்த்தை காட்டிய ஒருவன் வசம் என் கற்பை விற்று, அவன் வேறு ஒரு பெண்ணுடன் நேசம் கொண்டு மோசம் செய்ததை நினைத்துப் புண்ணான என் மனதைத்தேற்ற ஒருவரால் முடியுமா?" எனப்புலம்பிய பெண் ஒருவளின் கதை என் நெஞ்சை உருக்கியது. "தாயற்ற பெண்ணாகிய நான் ஒரு உறவினரால் வளர்க்கப்பட்டேன். எனக்கு ஆறு வயதாகும்போது பதினைந்து வயதுள்ள ஒருவனால் துர்ச்செய்கைக்கு வற்புறுத்தப்பட்டேன். பிறகு சில நாள்களில் என் சிறியதாயார் வீட்டில் போய் வளர்ந்தேன் அவ்விடத்தில் என்னுடன் துர்க்காரியங்கள் என் சகோதரனே நடத்தினான்" என்று ஒரு பெண்மணி எழுதியிருந்தாள். ஒரு விபசாரி பலமுறை அவள் தகாத காரியத்திற்காக வழக்கேற்பட்டு நீதிபதி முன்னர் நிறுத்தப்பட்டாள். "எத்தனை முறை உன் வழக்கில் நான் தண்டனை விதிப்பது" என்று நீதிபதி அவளைக்கேட்டார். "இதுவே கடைசி முறை" என்பதாக அவள் பதில் கூறினாள். பிறகு சில காலத்திற்கெல்லாம் அவள் தண்ணீரில் விழுந்து தற்கொலை செய்துகொள்ள அந்நீதிபதியே பரிசோதனைக்கும் போக நேரிட்டது, என்பது போன்ற கதைகளை எந்த பூலோக வாசி விரும்பக்கூடும்?

மாயா உலகத்தில் சூதும், குடியும் வியபசாரமும் மும்மூர்த்திகளாய் விளங்கின என்று கூறலாம். எந்த விருந்திலும் தாராளமாக குடிவகைகள் பரிமாறப்பட்டன சூதாடும் இடங்களில் நடக்கும் அட்டகாசமும் பணச்சிலவும் அளவிலடங்கா. வியபசார விடுதி என்னுமிடங்களில் உயர் வகுப்புப் பெண்கள்முதல்தாழ்ந்த சாதிப்பெண்கள்உள்ளிட விபசரிக்கவந்து பாழடைந்து செல்வது மகா கேவல சங்கதியாகப்பெருகும். நான் சென்றிருந்த தலை நகரத்தில் மட்டும் 5-லக்ஷம் வியபசாரிகள் இருந்தனர். வியபசாரிகளின் விடுதிகளில் பணத்தை இழந்து அழுது நொந்துபோனவர் கோடிக்கணக்காகும். ஒருவாரம் விபசாரியுடன் வசிக்க ஒரு மனிதன் இருபது ஆயிரம் கொடுத்தானும். இதுபோல் ஆயிரம் சங்கதி. இத்தகைய விபசாரவிடுதிகளின் இருப்பிடங்கள், மெல்லிய ஆடையுடன் அங்கம் தெரியும் திருமுகங்கள் யாவும் அந்நகரத்துப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன.

மாயா உலகத்தின் மதம் அழகான கருத்துக்களைப்போதிக்கின்றது. பணத்தின் பலம் மாய உலகத்தினருக்கு மதப்பற்றை அறவே நீக்கிற்று. "பிறரிடம் நீ இரங்கு" என்ற உத்தமக்கொள்கையை மறந்து அவர்கள் காட்டுமிராண்டி என்ற கூட்டத்தாரைத் துன்புறுத்தத் தொடங்கிவிட்டனர். கோயில், பக்தி, யென்று வாய் கூறினும் செய்கையில் கிஞ்சித்தும் இல்லாதிருந்தனர்.

"வியபசாரம் பாபம்" என்பதும் ஒரு கட்டளை. அந்த சட்டம் அனுஷ்டிக்கப்படுவது இதுவரை படித்ததிலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?

"குடிப்பது பாவம்" என்ற போதனையை மறந்து மாயாஉலகு மனிதர் பீப்பாயிலேயே எருமைபோல் கிடந்தனர். குடியால் கோயுற்றவர்கள் 1925-ம் ஆண்டில் நான் இருந்த நகரத்தில் 10361—பேர். அதில் இறந்தவர் 682-பேர். போலீஸால் தண்டிக்கப்பட்டவர் 6-லக்ஷம்பேருக்கு அதிகமாகும். இந்த நிலையில் அந்நன்மொழி காக்கப்பட்டது.

"மாயா உலகத்து மகிமைகள் படிக்கவோ, எழுதுவதற்கோ முடியாததாகும்: வியாபாரம், அதற்குரிய சாமர்த்தியம் இதுதவிற மாயா உலகம் எந்நிலையிலும் போற்றமுடியாத உலகமென எனக்குப்பட்டது. "எங்கள் உலகத்தில் "குணமே" பிரதானம். உங்கள் உலகில் "பணமே" பிரதானம். இதுவே நான் கண்ட உண்மை" என்பதாக என்னை உபசரித்த பெண்மணியிடம் வீடு சேர்ந்தவுடன் கூறினேன். "மூட நம்பிக்கை"யும், அநாகரீகமும் நிறைந்த உங்கள் உலகிற்கு நான் வந்துள்ளேன். எல்லாச்சங்கதிகளும் எனக்குத்தெரியும். உங்கள் உலகை நான் பாராட்ட முடியாது" என்றாள் அப்பெண்மணி.

"எங்கள் நாட்டிற்கு வந்ததுண்டா? வந்திருந்தால் எனக்குத்தெரிந்திருக்கும். உன்பெயர் என்ன? என்றேன்.

"என் பெயர் மிஸ்மேயோ" என்றாள்.

"ஆ! குப்பைக்காரி!" என்று கத்தினேன்.

* * * *

அடுத்த விநாடி என் படுக்கையில் நான் படுத்திருப்பது கண்டு ஆச்சரியமடைந்தேன். இது கனவா? நினைவா?

சுபம்.

# இராஜகோபாலன்.

(K. விஜயராகவ அய்யங்கார்.)

(முன் 121-ம் பக்கம் தொடர்ச்சி.)

" அன்புள்ள சகோதரா !

என் கணவன் உத்திரவுகொண்டு அடியாள் இந்நிரூபம் வரைகின்றேன். என்மனப்போக்குக்கு விரோதமாக அவருக்கு நான் வாழ்க்கைப்பட்டேன். ஆயினும் என் வாழ்நாளை அவருக்கு அடங்கியே கடத்தவேண்டும். அதுவே என் கடமை. அவ்விதம் நடந்து முக்தியடைவதே நியாயம். அவரும் முன்போல் இல்லை. நற்குணங்கள் ஏற்பட்டு வாழ்நாளில் மாறுதல் ஏற்பட்டுள்ளது.

என் கணவர் மோட்டார் வியாபாரம் செய்து என் சொந்த சொத்து 15000-ரூபாயும் போயிற்று. இப்பொழுது ஒரு ஆபத்தில் சிக்கி 7000-ரூபாய் கடன் பட்டார். இன்னும் ஒரு வாரத்தில் அது கொடுக்கப்படாவிடின் அவர் கைது செய்யப்படுவார். என் பொருட்டு நீங்கள் இது விஷயத்தில் உதவி செய்யவேண்டும். நானும் என் கணவரும் கண்காணுமிடத்திற்கு புறப்பட்டு போகிறோம். என் வாழ்வு குலைந்தது. உலகம் வெறுப்புற்றது.

இன்னும் மனம் உருகாதீர். ஒரு சற்காரிகையுடன் வாழப் பிரார்த்திக்கிறேன்.——சகோதரி விஜயம். "

மறுநாள் காலையில் இக்கடிதம் கண்டு ராகவன் மனம் உருகினான். அது சமயம் சுந்திரம் ஒரு கேஸ் விஷயமாக பங்களூர் போயிருந்தான். அவனுக்குப் பின்வரும் தந்தியைக்கொடுத்தார்.

" ராமு ஆபத்தில் சிக்கிக்கொண்டான் உன் உதவி தேவை. உடனே வருக.——ராகவன். "

இத்தந்திக்கு ராகவன் பின் வரும் பதில் கடிதம் பெற்றார்.

"அன்புள்ள ராகவா ! தந்தி வந்தது. ராமுவின் ஆபத்து இன்னது என்பதை உனக்கு முன்னால் நான் அறிவேன். எனது உத்தியோகம் ஒன்றையும் வெளியிடக்கூடாத ரகசிய வேலையாகும். அது பெரும் விலங்கு. மேலும் என் சுபாவமும் அப்படியேரகசியம் காப்பாற்றுவதுதான். குற்றஞ்செய்தவரை மன்னிப்பது என்னிடம் கிடையாது.

உன் காதலியுடன் பேசித்திரும்புங்கால் உன்னைச்சுட்டவன்யாரெனத் தெரியாது தவித்தாய். அக்காரியம் செய்தவன் உன் தயவை இன்று நாடும்

நமது ராமசாமியே. அதை அவன் டயரி மூலம் அறிந்தேன். அவனுக்குத் துன்பம் வந்ததில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். அது விஷயமாக என்னிடமிருந்து ஒரு துரும்பு அளவு கூட உதவி எதிர் பார்க்க வேண்டாம். இன்னும் ஒரு வாரத்தில் வருவதாக கமலத்திடத்து கூறவும்.

சுந்திரம்."

கடிதம் படித்து ராகவன் மனம் தசிந்தார். ராமு தனக்குத் தீங்கிழைத்திருப்பினும் தன் பழங்காதலிக்குக்கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற விரும்பினர். பிறரை மன்னிக்கும் உத்தம சுபாவம் கொண்டவரான படியால், உடனே பின் வருமாறு வரைந்தார்.

"அன்புள்ள ராமு,

உத்தமனாய் விளங்குகிறாய் என விஜயம் எழுதிய கடிதம் கண்டு மனம் பூரித்தேன். உன் குற்றமுள்ள நெஞ்சு எனக்குக் கடிதம் எழுதத் தடைப்படுத்தியது போலும்: ஏன் விஜயத்தை எழுதச்சொன்னாய்? உன்னை நான் மன்னித்துவிட்டேன். இத்துடன் ரூபாய் 7000–அனுப்பியுள்ளேன். அது தவிற ரங்கூன் மில் ஏஜன்ட் ஒருவருக்கு சிபாரிசு கடிதம் கொடுத்திருக்கிறேன். இந்த மோட்டார் வியாபாரமெல்லாம் குடும்பத்தை நாசமாக்கி விடும். இந்த எண்ணங்களை விட்டு ரங்கூன் செல். அவ்விடத்தில் ரூ. 300 வரை சம்பளம் தருவார்கள். அன்பன்ராகவன்,"

* * * * * * * * *

நாள்கள் மாதங்களாகி வருஷங்களாகி ஓடின. மேலேகூறிய சம்பவங்கள் நடந்து 20 ஆண்டுகள் ஆயிற்று. டாக்டர் ராகவன் ஓய்வு ஒழிவின்றி வைத்தியத்தொழிலில் ஈடுபட்டுப் பணம் குவிக்கின்றார்.

ஒருநாள் காலை 8–மணிக்கு அவரது மோட்டார் சென்னைத் துறைமுகத்தை அடைந்து ரங்கூனிலிருந்து வந்த பிரயாணிகளை ஏற்றிவந்தது. அன்று மாலை டாக்டர் ராகவன், பங்களாவில் முன்புறத்தோட்டத்தில் சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார். அவருக்கு முன்னால் ஐந்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஏராளமான மரங்களும், கொடிகளும், செடிகளும் நிறைந்த பெரிய விஸ்தீர்ணமான தோட்டத்தின் மத்தியில் அவர் விடுதி அமைந்திருந்தது. வாசல் புறத்தில் இரண்டு பித்தளைத் தகடுகள் தொங்கின. ஒன்றில் டாக்டர் ராகவன் என்றும், மற்றொன்றில் சுந்திரம், கமிஷனர் என்றும் காட்டப்பட்டிருந்தது. சிறிதுநேரம் பொருத்து சுந்திரம் வந்து எதிரே உள்ள நாற்காலியில் உட்கார்ந்தார். சற்றுப் பொறுத்து அவர் மனைவி கமலம் சுமார் 16-வயதுள்ள தன் குமாரி ராஜந்துடன் வந்து நின்றாள்.

டாக்டர் ராகவன் கமலத்தைப்பார்த்து "எங்கே உன்தோழி" என்றார். இதோ வந்துவிட்டேன் என்று ஓடி வந்தாள் விஜயம். இடையே ராமசாமி தன் குமாரன் கோபாலன் சகிதம் வந்து சேர்ந்தார். அன்று காலையில் அவர்களே ரங்கூனிலிருந்து வந்தவர்கள். ராமுவின் குமாரன் கோபாலன் அறிவில் சிறந்து, அழகில் மிகுந்து விளங்கினன்.

டாக்டர் ராகவன் நெடுநேரம் கண்களை மூடிக்கொண்டு இருந்தார். சற்று நேரம் பொருத்து "ராமு! முன்பு மோட்டார் விஷயமாக ரூ. 7000 கொடுத்தேனல்லவா? இத்தனை ஆண்டுகள் ரங்கூனில் இருந்து வந்தாயே. எவ்வளவு பணம் மூட்டை கட்டி வந்தாய்? அத்தொகையைத் திருப்பித் தரவேண்டாமா?" என்றார்.

"பணம் கொடுக்க முடியாது. என்னிடம் தம்பிடிகூட மிச்சமில்லை. வேறு ஏதாகிலும் கேளுங்கள். தருகிறேன்" என்றான் ராமு.

"சரி! கோபாலனை விட்டுவிடு; 7000 ரூபாய் திரும்பத் தரவேண்டியதில்லை" என்றார் டாக்டர்.

"சரி" என்றான் ராமு.

"சம்மதம்" என்றாள் குயில்போன்ற குரலுடைய விஜயம்.

* * * * * *

டாக்டர் ராகவன் வீட்டில் விவாகம். ராமசுவாமியின் குமாரன் கோபாலனுக்கும், சுந்திரத்தின் குமாரி இராஜத்திற்கும் விவாகம் என்பதே சென்னை நகர முழுதும் பேச்சு. பதினாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு. லக்ஷக்கணக்கில் ஏழைகளுக்குச் சாப்பாடு. சங்கீதத்தில் தேர்ச்சியும் ஆர்வமும்கொண்ட ராகவன் நான்கு நாளும் வந்தவர்கள் காது அலுத்துப்போகும்படி சங்கீதக்கச்சேரிகள் வைத்தார். டாக்டர் ராகவனின் நண்பர்கள் பற்பல பரிசுகளை தம்பதிகளுக்கு அனுப்பினர். மணமகனாகிய கோபாலனும், மணமகளாகிய இராஜமும் மணப்பந்தலில் பிரகாசித்தனர். மணமக்களை ஆசீர்வதித்து கவிச்சக்கிரவர்த்தி ரவீந்திரநாத் டாகோர் அனுப்பிய கடிதம் வருமாறு:—

"அன்புள்ள டாக்டர்,"

நான் மணமக்களுக்குக் கூறவேண்டியது யாதொன்றுமில்லை. ஏனெனில் தங்கள் கீழ் அவர்கள் இருக்கின்றார்கள். வாழ்வெல்லாம் இன்பமயம், என்றுமட்டும் கூறவிரும்புகிறேன். மணமக்களுக்கு பரிசாக ஒரு கீதாஞ்சலி புஸ்தகம் அனுப்பியுள்ளேன். மணமகள் பெயர் இராஜம்; மணமகன் பெயர் கோபாலன்போலும். சந்தோஷம். இராஜகோபாலன் வாழ்க.

டாகோர்."

துன்பங்கள் நீங்கி, இன்பம் தழைக்க, டாக்டர் ராகவன் யாவருடனும் சுகமே இருந்து காலங்கழிக்கின்றார்.——சுபம்.

---

குறிப்பு:— இக்கதை ஒரு சகோதரி எழுதிய குறிப்புகளைக்கொண்டு நண்பர் K. விஜயராகவ அய்யங்கார் அவர்களால் புதிய கருத்துக்களுடனும் கற்பனைகளுடனும் அழகாக எழுதப்பட்டது—ப—ர்.

ஓம்

# அறவழி.

(சுத்தானந்த பாரதி.)

அறவழி நன்ருய் அமைபெறுதற்கே,
அறவடி வானதோர் அம்மை துணையே.

அறிவுதேர்ந் தொழுகு
ஆற்றல் பொறுமை
இரப்ப திழிவு
ஈகை நன்று
உவப்பு மிகக்கொள்
ஊறு நினையேல்
எள்ளுவ தொழிக
ஏரில் உழை
ஐந்தை யடக்கு
ஒருமனப் படு
ஓரிடம் நில்
ஔடதம் சாந்தம்
எஃகு வீசேல்
கருணை யகங்கொள்
காமிற் கிணங்கேல்
கிளையை மறவேல்
கீர்த்தி பெறவாழ்
குடியா திரு
கூற்றிற் கஞ்சேல்.
கெடுநினை வகற்று
கேண்மை வளர்
கைத்தொழில் தேறு
கொள்கை கடைப்பிடி
கோள்பொய் சொல்லேல்
கௌரவ முறவாழ்
நப்போ லுதவு
சத்தியம் பேணு
சார்பு விலக்கு
சினத்தை யொழிக
சீரிய பணிசெய்
சுத்த முறவாழ்
சூட்டோ டுண்ணு
சென்மப் பயன்பெறு
சேயெனத் தெளிவுறு
சைந்யஞ் சுருக்கு
சொற்றவ றுதே
சோதியுள் நோக்கு
சௌக்கிய நெறிநில்
ஞால மறி
‡ ஞிமிறென வுழை
தன்மதிப் பகலேல்
தாய்மொழி போற்று
திண்மனந் துணைக்கொள்
தீண்டாமை யொழி
துணிந்தற மாற்று
தூக்கஞ் சுருக்கு

‡ வண்டு

தெவிட்டா தறஞ்செய்
தேசப் பணிசெய்
தைரியங் கைவிடேல்
தொண்டு வழிநில்
தோமறு வினைசெய்
தௌவைக் கிடங்கொடேல்
நலஞ்செய் தோங்கு
நாட்டது போற்று
நிறையுற் றொழுகு
நீப்பது துறவு
நுட்ப மறி
நூலறிந் தொழுகு
நெசவுத் தொழில்செய்
நேர்பொழு தாஞ்செய்
நைய வினைசெயேல்
நொந்தவர்க் குதவு
நோவு விளையேல்
நௌவென மயங்கேல்
பலமத மொரு*தே
பாரிறை வீடே
பிரித்துல காளேல்
† பீர்சொரிந் தழுகேல்
புனிதனை யெண்ணு
பூப்பயன் பொதுவே
பெண்மை கற்பு
பேர்நசை யடக்கு
பைம்புல னுலவு
பொதுநல மிகச்செய்
போர்நசை போக்கு
‡ பௌவ மெய்யறி
மங்கலம் பேசு
மாதரை யிகழேல்
மிடிப்பிணி நீக்கு
மீத்துச் செலவிடு
‡ முப்பகை போக்கு
மூத்தோர் உரைகொள்
மெய்வலி பெருக்கு
மேலோர் குழுவிரு
மையல்கொண் டலையேல்
மொழிபல பழகு
மோசஞ் செய்யேல்
மௌனம் பேணு
வயிற்றை வணக்கு
வாத மொழிக
விடுதலை வெறிகொள்
வீரனென வாழ்
வெறுமை காட்டேல்
வேலைசெய் துண்ணு
வைத்தியன் இயற்கை
வௌவு நசைவிடு
யாக்கை கோவில்
யோகம் முயல்க
யௌவன மனங்கொள்
இராப்பக லெண்ணு
இலௌகி கந்தெரி
முப்போல் சிறந்திடு
அளவோ டாற்று
அறந்தனை வணங்கு
உறுதி மிகக்கொள்
மனந்திறந் தருள்சேர்
தனைத்தேர்ந் திலகாய் !
அனைத்தும் வாழி !

* கடவுள் † கண்ணீர். ‡ சமுத்திரம் காமம், வெகுளி, மயக்கம்.